*1994 நவம்பர் 7*]

திருவையாறு தொகுதி, கடம்பங்குடி ஊராட்சி, இந்திரா நகர் பகுதியில் வாழும் மக்களுக்கு கூட்டுப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, கடம்பங்குடி ஊராட்சி இந்திரா நகர் பிரிவில் வாழும் குடியிருப்புதாரர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு முன்பே பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள நத்தம் நிலவரித் திட்டத்திலும் நத்தம் மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது.

**24—**

**திருநெல்வேலி வட்டத்திற்கென அரசு மருத்துவமனை அமைத்தல்.**

**22139*–திரு. டி. வேலையா:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி வட்டத்திற்கென அரசு மருத்துவமனை இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) திருநெல்வேலி நகராட்சிக்குச் சொந்தமான கண்டியப்பேரி, பெண்கள்—குழந்தைகள் மருத்துவமனையை அரசு வட்ட மருத்துவமனையாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி நகரத்தில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.

(ஆ) திருநெல்வேலி நகர் மன்றப் பராமரிப்பிலுள்ள எம்.வி. புரம் மருந்தகம் மற்றும் அம்மருந்தக வளாகத்திலுள்ள மகப்பேறு இல்லம் மற்றும் கண்டியப்பேரி, பெண்கள்—குழந்தைகள் நல மருத்துவமனை ஆகியவற்றை திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையுடன் இணைந்த புறநகர் மருத்துவமனையாக அரசே ஏற்று நடத்த செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.